# கோறளைப்பற்று பிரதேச சபை

## 54வது சபை அமர்வு (04.08.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** **04**.08.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 54ஆவது சபை அமர்வு, 04.08.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

01. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் ~ கௌரவ தவிசாளர்
02. திரு. தர்மலிங்கம் யசோதரன் ~ கௌரவ உப தவிசாளர்
03. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ~ கௌரவ உறுப்பினர்
04. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் ~ கௌரவ உறுப்பினர்
05. திரு. காளிக்குட்டி நடராசா ~ கௌரவ உறுப்பினர்
06. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் ~ கௌரவ உறுப்பினர்
07. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் ~ கௌரவ உறுப்பினர்
08. திரு. கனகரெட்ணம் கமலநேசன் ~ கௌரவ உறுப்பினர்
09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் ~ கௌரவ உறுப்பினர்
10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் ~ கௌரவ உறுப்பினர்
11. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் ~ கௌரவ உறுப்பினர்
12. திரு. குணராசா குணசேகரன் ~ கௌரவ உறுப்பினர்
13. திரு. கந்தசாமி பகீரதன் ~ கௌரவ உறுப்பினர்
14. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் ~ கௌரவ உறுப்பினர்
15. திரு. சாமித்தம்பி மணிசேகர் ~ கௌரவ உறுப்பினர்
16. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ~ கௌரவ உறுப்பினர
17. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ~ கௌரவ உறுப்பினர்
18. திருமதி. பொன்னையா கலைவாணி ~ கௌரவ உறுப்பினர்
19. திரு. சுந்தரம் சுதர்சன் ~ கௌரவ உறுப்ப
20. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் ~ கௌரவ உறுப்பினர்
21. திரு. சண்முகம் கதிரவன் ~ கௌரவ உறுப்பினர்

54ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 04.08.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 54 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

எமது சபையின் நடவடிக்கைகளானது நாட்டின் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக உத்தியோகத்தர்களுக்கு சுழற்சி முறையில் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், இருந்த பொழுதும் தற்பொழுது. ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடுகாரணமாக எமது சபை வாகனங்களுக்கு கிடைக்கவேண்டிய எரிபொருள் இன்னும் கிடைக்கவில்லை எனவும் எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பாக எமது பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் எரிபொருள் கோரி கடிதங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் ,இருந்த போதும் இன்று வாழைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து எரி பொருள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் , அத்துடன் எரிபொருள் தட்டுப்பாடு இருந்த போதும் கிடைக்கின்ற எரிபொருளினைக் கொண்டு முடிந்தளவில் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கையினை சமனான முறையில் மேற்கொள்வதாகவும் சுட்டிக்காட்டியதுடன் ,

அத்துடன் எமது சபைக்குரிய வருமானம் கிடைப்பதலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் வருமான அறவீட்டை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கிடைக்கா விடினும் ஏதோவொரு வகையில் எரிபொருளினை பெற்றுக்கொடுத்து ஓரளவிற்கு வருமான அறவீட்டினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் , மாதாந்தம் குத்தகை பெற்றுக்கொண்டவர்கள் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகாரணமாக தங்களது நிலுவையினை செலுத்துவதில் தாமாதம் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் இருந்தபோதும் அவர்களுக்கான அறிவித்தல் கடிதங்கள் வழங்கப்பட்டு வருமான அறவீட்டினை வருமானவரி பரிசோதாகர்கள் மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன்,

மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக எமது சந்திவெளி திகிலிவெட்டைப் படகுச் சேவை மற்றும் குடிநீர் விநியோகம் என்பன சற்று தாமதம் ஏற்படுவதாகவும் , இருந்தபோதும் சிறு படகுகள் வைத்திருப்பவர்களிடம் குறைந்தளவு மண்ணெண்ணை பெற்றுக்கொண்டு மேற்படி சேவைகளை இயன்றளவு வழங்கிக்கொண்டிருப்பதாகவும் ,

சந்திவெளி திகிலிவெட்டைப் படகுச் சேவையில் பயணிப்பவர்கள் எரிபொருள் இல்லாத காரணத்தினால் கயிறு மூலம் பாதையினை இயக்கி பயணம் மேற்கொள்வதாகவும் இருந்தபோதும் குறித்த பயணம் ஆபத்தானது என பயணிகளிடம் அறிவித்திருப்பதாகவும் இவ்வாறு பயணிப்பதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்ததுடன் ,

மண்ணெண்ணை வரும்பொழுது மொத்தமாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறிக்கொண்டு கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்துமாறு தெரிவித்துக்கொண்டு தனது தலமையுரையினை நிறைவு செய்தார்.

காலை 9.15 மணியளவில் கௌரவ உறுப்பினரான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் அவர்கள் கௌரவ தவிசாளார் அவர்களின் அனுமதியினைப் பெற்று சபை நடவடிக்கையிலிருந்து வெளியேறினார்.

**அதனைத்தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள்** கௌவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரணையினை எதிர்த்து வாக்களித்திருப்பதாக கூட்டக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் ஆனால் தான் ஆதரவாக வாக்களித்ததாக தனது கருத்தினை பதிவு செய்தார்.

**அதற்குப்பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** வாக்கெடுப்புத் தொடர்பாககௌரவ உறுப்பினருக்கு வழங்கப்பட்ட தாளில்கௌரவ உறுப்பினரது நிலைப்பாட்டை பதிவு செய்யவில்லை என பதிலளித்தார்.

**அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள்** கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 14 வட்டாரத்திலும் 14 ஊழியர்களும் கருணை அடிப்படையில் ஒருவருமாக மொத்தம் 15 பேரை இணைத்துக்கொள்வதற்கான (நியமனம்) தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், ஆனால் அத் தீர்மானம் செயற்படுத்தப்படவில்லை எனவும் தற்பொழுது தற்காலிக சாரதி நியமனம் நியமிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றி தலமையுரையில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும் என தனது கருத்தை பதிவு செய்தார் .

**அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** இன்னும் சாரதி நியமனம் வழங்கப்படவில்லை எனவும் சபையினூடாக விண்ணப்பங்கள் வழங்கி தகுதி அடிப்படையில்தான் நியமனம் வழங்கப்படும் எனவும் தனிப்பட்ட நபர்களுக்கு நியமனம் வழங்கப்படாது என பதிலளித்தார்.

**அதனைத் தொடர்ந்து** கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை கௌரவ உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்வதாக கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன், கூட்டக்குறிப்பிற்கு ஆதரவாக வாக்கெடுப்பு இடம்பெறும்போது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன் , ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. சாமித்தம்பி மணிசேகர், திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன் அகிய 11 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. குணராசா குணசேகரன், திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் காமீது லெவ்வை இப்றாஹீம், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி, திருமதி. பொன்னையா கலைவாணி ஆகிய 08 கௌரவ உறுப்பினர்கள் நடுநிலை வகித்ததுடன் , கடந்தமாதக் கூட்டக்குறிப்பானது 11 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது ,ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர், ஆகிய கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்போது அவையில் பிரசன்னமாகவில்லை .

**அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான** ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா ,ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் ஆகியோர் சுகயீன விடுமுறை அறிவித்துள்ளதாகவும் அதனை அங்கிகரித்துத் தருமாறு கௌரவ தவிசாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கமைவாக கௌரவ உறுப்பினர்களது விடுமுறை அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

திருத்தம் 01 : கடந்தமாதக் கூட்டக்குறிப்பில் கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்களால் சமர்பிக்கப்பட்ட **KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/01/2022 இலக்கப்** பிரேரணை வாக்கெடுப்பின்போது கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் எதிராக வாக்களித்ததாக குறிப்பிடப்பட்ட வசனமானது “ **பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டதாக மாற்றம் செய்யப்படுகின்றது**”.

**அதனைத்தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் அவர்கள்** தற்பொழுது எமது சபைக்குச் சொந்தமான அரைவாசிக்கு மேற்பட்ட வாகனங்கள் பழுதடைந்துள்ளதாகவும் அதனை சபையின் ஆயுட்காலம் முடிவடையும் முன்னர் திருத்தம் செய்யவேண்டும் எனவும் எமது சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றிற்கு விறேக் இல்லாத காரணத்தினால் விபத்துக்கள்ளானதாகவும் அதன் சாரதி 1,50,000.000 ரூபாய் பணம் வழங்கி திருத்தியதாகவும் ஏன் எமது சபையால் அவ் வாகனம் திருத்தப்படவில்லை என கேள்வி எழுப்பினார் .

**அதற்குப்பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** விபத்து தொடர்பாக பொலிஸாரினால் அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்னர் எமது சபையினால் விபத்து தொடர்பான விசாரணை மேற்கொள்வதற்கான பரிந்துரை செய்யப்பட்டு அதன்பின்னர் உயர் அதிகாரிகளால் விபத்துத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களின் விசாரணை அறிக்கையின்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதிலளித்தார் .

அதனைத்தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் சந்திவெளி திகிலிவெட்டை படகுச்சேவை கயிறு மூலம்தான் நடைபெறுகின்றது எனவும் அப் பயணத்தினை தடைசெய்யவேண்டும் எனவும் மற்றும் சிறிய தோணிகளில் பாதுகாப்பற்றமுறையில் மக்கள் பயணம் மேற்கொள்வதாகவும் இது தொடர்பான அறிவித்தல் பலகை காட்சிப்படுத்த வேண்டும் எனவும் தனது கருத்தினைப்ப் பதவிவு செய்தார்

## கணக்கறிக்கை சமர்ப்பித்தல்

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது .

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 54ஆவது சபை அமர்வானது காலை 10.15 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

………..........................................

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.